17—

மகளிர் கலைக் கல்லூரி

***293**—**திரு. சோ. மாரியப்பன் கென்னடி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி அவர்கள்.*

திரு. சோ. மாரியப்பன் கென்னடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி தங்கத் தாரகை, (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நீதி காக்கும் வீராங்கனை, திராவிட பேரரசி, வாழும் வேலு நாச்சியார் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். இந்த மாபெரும் சபையில் எனக்கு கேள்வி கேட்கும் வாய்ப்பை அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதி, மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். என்னுடைய தொகுதியில் 25–க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. வருடந்தோறும் சுமார் 3,000 மாணவர்கள் தேர்ச்சி பெற்று வெளியேறுகின்றார்கள். இவர்கள் உயர் கல்வி கற்பதற்கு சிவகங்கை

2016 ஆகஸ்ட் 3]

அல்லது மதுரைக்குத்தான் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் உள்ள மாணவர்களின் நலன் கருதி, எங்கள் தொகுதியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அல்லது அரசு பொறியியல் கல்லூரி அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எனது பணிவான வேண்டுகோளை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கின்ற தொகுதியானது சிவகங்கை மாவட்டத்திற்கு உட்பட்டது. சிவகங்கையில் மகளிர் கல்லூரி ஒன்றைச் சேர்த்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் நான்கும், அரசு உதவிபெறும் கல்லூரிகள் நான்கும், ஆக மொத்தம், இந்த 8 கல்லூரிகளும் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. கடந்த 2015-2016 ஆம் ஆண்டுகளில் பார்க்கின்றபோது, அந்த அரசுக் கல்லூரிகளில் 3,907 பேரைச் சேர்க்க இடம் இருந்தும், 83 பேர் குறைவாக சேர்ந்திருக்கின்றார்கள். மேலும், 2016–2017–ல் உயர் கல்வி படிப்பதற்கான வாய்ப்பை அதிகப்படியான மாணவர்களுக்கு உருவாக்கித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். நம்முடைய சிவகங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மானாமதுரை தொகுதியிலிருந்து சிவகங்கையானது 18 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. ஆனால், அந்த நான்கு அரசுக் கல்லூரிகளில் பார்க்கின்றபோது, UG Course 40 பேர்களுடனும், PG Course 49 பேர்களுடனும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆக, இந்த மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு, இப்போது அங்குள்ள கல்லூரிகளே போதுமானதாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல், உயர் கல்வி கற்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பின், எதிர்காலங்களில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசானது பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி அமர்கின்றேன்.

[2016 ஆகஸ்ட் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி அவர்கள்.*

முற்பகல் 10–20

திரு. சோ. மாரியப்பன் கென்னடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான துறையூர் தொகுதியிலிருந்து கல்லூரிப் படிப்பைத் தொடங்குவதற்கு மாணவர்கள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால், சுமார் 50 முதல் 80 கிலோ மீட்டர் வரை பயணம் செய்துதான் மாணவர்கள் கல்லூரிப் படிப்பை பயில முடிகிறது. எனவே, எனது துறையூர் தொகுதியில் இருபாலர் பயிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 2011–2016 ஐந்தாண்டு ஆட்சிக் காலத்திலே, இந்தியாவிலே இதுவரை எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, புதிதாக மாணவர்களுடைய சேர்க்கைக்காக, 67 கல்லூரிகளை வழங்கிய ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, 24 பல்கலை உறுப்புக் கல்லூரிகளும், 18 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 4 பொறியியல் கல்லூரிகளும், 16 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 5 கல்வியியல் கல்லூரிகளும் என 67 கல்லூரிகள் அறிவிக்கப்பட்டு, இன்றையதினம் மாணவர்களுடைய சேர்க்கை இந்திய அளவிலே*

2016 ஆகஸ்ட் 3]

உயர்த்திக் காட்டுகின்ற அளவுக்கு தமிழகம் முதலிடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எங்கெங்கு ஏழை எளிய மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்கு வாய்ப்புகள் குறைவாக இருக்கிறதோ அந்தப் பகுதியைக் கண்டறிந்து, அதை நிவர்த்தி செய்கின்ற வகையிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது செயல்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரிலை ஆயுதத்தை ஈட்டி முனையாக்கி, எதிரிகள் கூட்டத்தை சுக்குநூறாக்கி, வீரத் திருமகளாக, வெற்றித் திருமகளாக, அலைமகளாக, கலைமகளாக (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் வணங்கும் தெய்வமாக வாழ்ந்து வருகின்ற காவல் தெய்வம், இதய தெய்வம், பாரிவள்ளலின் வாரிசு, புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மதுரை, திண்டுக்கல், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை ஆகிய ஐந்து மாவட்டங்களை இணைக்கும் பகுதியான மேலூர் தொகுதியிலுள்ள கொட்டாம்பட்டி பகுதியில் ஓர் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மேலூர் தொகுதியிலே ஓர் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைக்கப்படுமா என்று கேட்டுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011–2016 ஆட்சிக் காலத்திலே மதுரை மாவட்டத்திற்கென்று கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பல்கலை உறுப்புக் கல்லூரியாக ஒன்றை வழங்கியிருக்கிறார்கள். அதைப்போல, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி இரண்டையும்*

வழங்கியிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், அங்கு மாணவர்களின் சேர்க்கைக்குத் தகுந்தாற்போல், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது பரிசீலனை செய்து, கடந்த காலத்திலே 67 கல்லூரிகள் அறிவிக்கப்பட்டதிலே, மேலூர் தொகுதியில், கல்வியியல் கல்லூரி ஒன்றும் வரவிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், எந்தெந்தப் பகுதிகளில் மாணவர்களுடைய சேர்க்கை எண்ணிக்கை கூடுதலாக இருக்கிறதோ அந்தப் பகுதியைக் கண்டறிந்து, அவசியம் இருப்பின் அங்கே கல்லூரியை உருவாக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

18—

நேரடி நெல் கொள்முதல் நிலையம்

***900—திரு. எஸ். ஆஸ்டின்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி தொகுதி, தோவாளை ஒன்றியப் பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படியெல்லாம் கேட்டால் எப்படி? வாய்ப்பு இருக்கிற அளவுக்குள்தானே தர முடியும்? உங்கள் அனைவருக்குமே வாய்ப்புத் தர வேண்டுமென்றால் எப்படி? (குறுக்கீடு) ஒரு கேள்வியை நான் எவ்வளவு நேரம் நீட்டிக்க முடியும்? (குறுக்கீடு) அதெல்லாம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) எங்களுக்கும் programme எப்படி நடத்த வேண்டுமென்று தெரியும்.